| | | |
|---|---|---|
| சாட்சி : PW 3<br>திரு.ரகுநாதன்<br>த.பெ. திரு. தங்கராஜ் | அ.வ.எண்.380/2010 | 01.04.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் மண்ணச்சநல்லூர். எனக்கு வழக்கு சொத்திற்கு அருகில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. எந்த இடத்தில் எனது வீடு உள்ளது என்றால் பொது சந்திற்கு மேற்கே சைக்கிள் ஸ்டேண்டு, அதற்கு மேற்கே எனது வீடு உள்ளது. எனது வீட்டிற்கும், சைக்கிள் ஸ்டேண்டிற்கும் நடுவில் ஒரு பாதை உள்ளது என்றால் சந்து உள்ளது, அது என்னுடைய சந்து.

2) மேற்படி சந்திற்கு முன்னும், பின்னும் நான் கேட் அமைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சந்தை என்னுடைய தனிப்பட்ட சந்து என்று நான் கூறுகிறேன் என்றாலும், அது வரைபடத்தில் கிடையாது என்றாலும் சரிதான். நான் 30 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டுமனையை கிரையம் பெறும்பொழுது என்னுடைய சந்தும், சைக்கிள் ஸ்டேண்டிற்கு கீழ்புறம் உள்ள சந்தும் வரைபடத்தில் இல்லை என்றால் சரிதான்.

3) நான் தனிப்பட்ட முறையில் விட்டுள்ள சந்தில் வேறு யாருக்கும் உரிமை இல்லை என்பது போல, மேற்படி சைக்கிள் ஸ்டேண்டு வைத்திருப்பவர் தனிப்பட்ட முறையில் விட்டுள்ள அவரது கீழ்புற சந்திலும், வேறு யாருக்கும் உரிமை இல்லை என்றால் சைக்கிள் ஸ்டேண்டிற்கு கீழ்புறம் உள்ள சந்தை சைக்கிள் ஸ்டேண்டு வைத்திருப்பவர் தனிப்பட்ட முறையில் விடவில்லை, மேற்படி சைக்கிள் ஸ்டேண்டு உள்ள இடத்தின் 3 முன்னுரிமையாளர்களுக்கு முன்புள்ள முன்னுரிமையாளர், நான் கிரையம்

பெறும்பொழுது விட்ட சந்து அது, கலியபெருமாள் என்பவரிடம் இருந்து நானும், பாண்டியன், ராஜீபிள்ளை ஆகியோர் 5 வீட்டுமனைகளை கிரையம் பெற்ற போது மேற்படி சந்தை நாங்களாக விட்டுக்கொண்டோம்.

4) நான் சொல்வது போல் நாங்களாக சந்து விட்டிருந்தால், மேற்படி சந்து இருக்கும் பகுதிக்கு கிரையத் தொகை வாங்காமல் தான் விற்கவேண்டும் என்றால் சரிதான். ரவி யாரிடம் இருந்து சொத்தை கிரையம் பெற்றார் என்றால் பாண்டியனின் சகோதரரிடம் இருந்து. அதன் மனை எண் என்ன என்றால் 68, 69. மேற்படி மனை எண்.68, 69 யை யார் தற்போது கிரையம் பெற்றுள்ளனர் என்றால் ஜெயக்குமார் கிரையம் பெற்றுள்ளார்.

5) மேற்படி மனை எண்.68,69 ன் மொத்த சதுரடி 3990–1/2 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனைகளை விற்கும்போது ரவி சந்தை விடாமலேயே மொத்த சதுரடியையும் விற்பனை செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்பொழுது நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன்.

6) நான் இன்று நீதிமன்றத்திற்கு 2ம் வாதியுடன் தான் வந்தேன் என்றால் சரியல்ல, நானாக தான் வந்தேன். எனக்கு வழக்கு குறித்து எப்படி தெரியும் என்றால் பொது சந்தை ஜெயக்குமார் அடைத்ததால் வழக்கு குறித்து தெரியும். மேற்படி பொது சந்து அரசாங்கத்தால் விடப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல, வீட்டுமனைகளை நாங்கள் கிரையம் பெறும் பொழுது நாங்கள் தான் அரசுக்கு எழுதிக்கொடுத்தோம்.

7) மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது

என்னுடைய கைவசம் இல்லை. பின்னர் எதன் அடிப்படையில் பொது சந்தை வீட்டுமனைகளை நாங்கள் கிரையம் பெறும் பொழுது நாங்கள் தான் அரசுக்கு எழுதிக்கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் 1ம் வாதி ராஜீபிள்ளை தான் மேற்படி சந்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டதாக சொன்னார். நான் நேரடியாக எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

8) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை எங்கு தட்டச்சு செய்தேன் என்றால் 1ம் வாதி ராஜீபிள்ளையின் மகன் 3ம் வாதி ராமுவின் வழக்கறிஞர் அலுவலகத்தில் தட்டச்சு செய்யப்பட்டது. அதில் உள்ள விபரங்களை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். ராஜீபிள்ளை விட்டதாக சொல்லும் 2 அடி சந்தில், அவரது மேல்புற சுவர் 1/2 அடியும், அதற்கு மேல்புறம் 1 அடி சன்சைடும் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9) 1ம் வாதியின் வீட்டிற்கு மேல்புறம் எத்தனை ஜன்னல்கள் உள்ளது என்றால் ஒரு ஜன்னல். அதில் சன்சைடு மேல்புறம் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சன்சைடிற்கு மேலாக தான் 2 அடி தள்ளிதான் வேலி உள்ளது என்றால் தற்போதைய நிலையில் 1ம் வாதியின் சுவற்றுடன் மேற்படி வேலி சாய்ந்த நிலையில் உள்ளது. அப்படியானால் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்யும் போது 1/2 அடி சுவரும், 1–1/2 அடி சன்சைடும், அதற்கு அடுத்து வேலி உள்ளதாக அளந்து காட்டினார் என்றால் சரியல்ல, அளந்து காட்டவில்லை.

10) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சுதாகர் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. மதியழகன் அவர்களும் இருந்தார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தை அளவீடு செய்தது யார் என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)